செய்தி வெளியீடு எண். 590 நாள். 21.7.2008

## செய்தி வெளியீடு

# நலிந்த கலைஞர்களுக்கு மாதம் 1000 ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டம் இந்த ஆண்டில் மேலும் 500 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

* * *

கலைப் பணியை தங்கள் வாழ்வாகக் கொண்டு தொண்டு செய்து நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த ஒய்வூதியம் மாதம் 500 ரூபாய் என்பது 2006ஆம் ஆண்டில் இந்த அரசு அமைந்த பிறகு மாதம் 1000 ரூபாய் என உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தற்போது 6391 நலிந்த கலைஞர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

தமிழக சட்டப் பேரவையில் 8.5.2008 அன்று, “2008–2009ஆம் நிதியாண்டில் கூடுதலாக 500 நபர்களுக்கு நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி மாதம் ரூபாய் 1000/– வீதம் வழங்கப்படும்” என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பின்படி, நலிந்த நிலையில் வாழும் மேலும் 500 கலைஞர்களுக்கு ஒய்வூதிய நிதியாக மாதம் ரூபாய் 1000 வீதம் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (21.7.2008) ஆணையிட்டுள்ளார். இதன்படி மொத்தம் 6891 நலிந்த கலைஞர்கள் பயன் பெறுவார்கள்.

இதன் காரணமாக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 60 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும்.

* * *

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9